சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 47/2018

**PW 1 சாதிக்** 25.07.2025

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் இந்த மனுவை எனது மகன் விபத்தில் இறந்ததற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது மகன் விபத்தில் இறந்த போது என்ன வயது, என்ன படித்துள்ளார் மற்றும் மனுதாரர்கள் தான் இறந்து போனவரின் வாரிசுகள் என காட்டுவதற்காக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் அது சரியல்ல. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தை பொருத்து குற்றவியல் நீதிமன்றத்தில் நடந்த வழக்கு விடுதலை செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்றும், அவரின் வாகனம் விபத்தில் சம்மந்தப்படவில்லை என்றும் எதிருரை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். சம்பவத்தன்று கோட்டூர் அரசு மருத்துவமனையில் எதிர்மனுதாரரை நான் பார்த்தேன் என்றால் சரிதான். அவருடன் யார் யார் இருந்தார்கள் என கேட்டால் சுமார் 4, 5 பேர் இருந்தார்கள். ஆனால் அவர்களின் பெயர் தெரியவில்லை. என் மகனுடன் படித்த கண்ணன் என்பவர் உடன் இருந்தாரா என்றால் எனது மகனை அஷ்ரபும், கண்ணனும் தான் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு யார் யார் புகார் கொடுக்க சென்றோம் என கேட்டால் நானும், காளிஸ்வரனும் சென்றோம். காளிஸ்வரனை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்து எங்கு நடந்தது கோட்டூர் சங்கம்பாளையம் ரோட்டில் மேல்புறமாக விபத்து நடந்தது. நான் காவல் துறையில் புகார் கொடுக்கும் போது

மேற்கண்ட விவரத்தை தான் சொன்னேன் என்றால் அவ்வாறு தான் சொன்னேன். விபத்து நடந்த ரோடானது நேரான ரோடு என்றால் சரிதான். குற்றவியல் வழக்கில் நானும் எனது மனைவியும் சாட்சியம் அளித்தோம் என்றால் சரிதான். விபத்தை நானும் எனது மனைவியும் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரர் மீது கொண்ட காழ்புணர்ச்சி காரணமாக பொய் புகார் கொடுத்தேன் என்றால் அது சரியல்ல. எதிர்மனுதாரர் தான் விபத்தில் அடிபட்டு கிடந்த எனது மகனை மருத்துவமனையில் சேர்த்தார் என்றும், நான் எதிர்மனுதாரர் மீது உள்ள முன்விரோதத்தின் காரணமாக அவரை பழி வாங்க வேண்டி பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் அரசியல் பின்புலத்தை வைத்து கொண்டு உண்மை குற்றவாளியை தப்பிக்க விட்டு விட்டு எதிர்மனுதாரர் மீது பொய் புகார் கொடுத்துவிட்டேன் எனறால் சரியல்ல. இந்த விபத்திற்கும் எதிர்மனுதாரருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், எதிர்மனுதாரர் விபத்தில் சம்மந்தப்படவில்லை என்றால் சரியல்ல. மனிதாபிமான அடிப்படையில் எனது மகனை எதிர்மனுதாரர் மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் அது சரியல்ல. விபத்தில் இறந்து போன எனது மகனின் கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்று சொன்னால் அது சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல எனது மகன் நின்று கொண்டிருக்கும் போது விபத்து நடைபெறவில்லை என்றும், போலிசார் விசாரணையில் எனது மகன் ரோட்டை குறுக்காக கடக்கும் போது விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் அது சரியல்ல. விபத்தை நேரடியாக பார்த்த நபரை நான் சாட்சியாக விசாரிக்க போகின்றேனா என்றால் விசாரிக்கபோகிறேன். விபத்திற்கு எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்பதால் நான் இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க

தேவையில்லை என்றால் சரியல்ல. நான் உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யாக மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி